**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.1002/2022 P.W.3**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | கருணாநிதி | த–பெ | முத்தரசு |
| ஊர்: | : | காரைக்குடி | சமயம்: | |
| வயது: | : | 58/2025 | வட்டம்: | |
| தொழில்: | : | பேக்கரி | மாவட்டம் | சிவகங்கை |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 30.07.2025**

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

**முதல் விசாரணை**

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து பேக்கரி வைத்து வருகிறேன். கடந்த 08.12.2018 அன்று நான் சிக்கிரி நிலையத்திற்கு எதிர்புறம் சிக்கிரி ஷாப்பிங் காம்பிளக்ஸில் பேக்கரி கடை வைத்துள்ளேன். இரவு 10.00 மணியளவில் நானும் ரகுமானும் நின்று பேசிக்கொண்டிருக்கும் போது வடக்கு காவல் நிலைய ஆய்வாளர் வந்தார். அங்கிருந்த விளக்குவெளிச்சத்தில் போஸ்டு மரத்திற்கு அருகே ஏற்கனவே சம்பவ சாலையில் நடந்த விபத்து குறித்து வரைபடம் தயார் செய்தார்கள். அதில் நான் கையொப்பம் செய்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ 2.**

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்த இடத்தில் மின்கம்பம் இருந்தது அதில் விளக்கு எறிந்து கொண்டிருந்தது அதற்கு கீழ் ஆய்வாளர் விசாரணை செய்து கையொப்பம் வாங்கினார். நான் கையெழுத்திட்ட ஆவணத்தில் என்ன விபரம் எழுதி இருந்தது என்றால் தெரியாது. அழகப்பா காவல் நிலையம் சம்பவம் நடந்த இடத்திற்கு எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் 100 மீ இருக்கும். போலீசார் அருகில் இருப்பதால் என்னுடைய கடைக்கு அடிக்கடி வருவார்கள் என்றால் சரிதான். அழகப்பாபுரம் காவல் நிலையத்தின் போலீசார்கள் தெரிந்தவர்கள் என்ற காரணத்தால் ஆவணத்தில் காவல்நிலையத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு சம்பவ இடத்தில் வைத்து பார்வை மகஜரில் கையெழுத்திட்டேன் என்று பொய் சாட்சியம் சொல்லுகிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2025.07.31 10:24:05 +0530

குற்றவியல் நடுவர், காரைக்குடி